# குழந்தைப் பாலியல் கொடுமை என்றால் என்ன?



**ஒரு குழந்தையோட அந்தரங்க உறுப்புகளை எந்த வகையிலும் தவறாகப் பயன்படுத்துவது தான் குழந்தைப் பாலியல் கொடுமை.**



**உதாரணமா**

தன்னோட அந்தரங்க உறுப்புகளக் குழந்தையிடம் காட்டுவது அல்லது குழந்தையின் அந்தரங்க உறுப்புகளக் காட்டச் செய்வது

ஆபாசமா படம் எடுப்பது
ஆபாசப் படம் காட்டுவது



குழந்தை ஆடையில்லாமல் இருக்கும்போது மறைந்திருந்து பார்ப்பது.



குழந்தையிடம் நேரிலோ தொலைபேசி, கடிதம் அல்லது கம்ப்யூட்டர் மூலம் ஆபாச விஷயங்கள் ஜோக்ஸ் பேசுவது

குழந்தையின் அந்தரங்க உறுப்புகளத் தான் தொடுவது அல்லது தன் அந்தரங்க உறுப்புகளத் குழந்தையைத் தொடச் செய்வது.



## இதனால பாதிக்கப்படுறது யாரு?

எல்லாக் குழந்தைகளும் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கு.







## பாலியல் கொடுமை செய்யக் கூடியவங்க யாரு?



யார் வேணும்னாலும் செய்யலாம். பெண்களும் பாலியல் கொடுமை செய்யறாங்க. ஆனா, அதிகமான அளவுல ஆண்கள்தான் இதைச் செய்யறாங்க.



இதுல நிறைய பேர் குழந்தைக்கு முன்னாடியே நல்லாத் தெரிஞ்சவங்களாகவும் குழந்தையின் குடும்பத்தைச் சேர்ந்தவங்களாகவும் தான் இருக்காங்க.

# குழந்தை பாதுகாப்பா இருக்க பெற்றோர் என்ன செய்யலாம்?



உங்க குழந்தை யாரோட எங்க இருக்குன்னு எப்பவும் தெரிஞ்சு வெச்சிருக்கணும்.

உங்க குழந்தை உங்களோட எந்த விஷயத்தைப் பத்தியும் பேசலாம் என்ற தன்னம்பிக்கையை உருவாக்குங்க.



அந்தரங்க உறுப்புகளோட (உள்ளாடையால மறைக்கப்படும் உடல் உறுப்புகள்) சரியான பேரைச் சொல்லிக் கொடுங்க. இந்தத் தொடுதல் விதியை உங்கக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுங்க:

குழந்தையோட அந்தரங்க உறுப்புகள அவர்களின் உடல் ஆரோக்கியம் தவிர வேறு காரணங்களுக்காக மத்தவங்க தொடுவது சரி இல்லை.

இந்தத் தொடுதல் விதியை யாராவது மீற முயற்சி செய்தால் உடனே அந்த இடத்துல இருந்து போயிடணும். குழந்தைக்கு உதவி செய்யக்கூடியவங்கக் கிட்டச் சொல்லணும்.



# ஒருவேளை குழந்தைக்குப் பாலியல் கொடுமை ஏற்பட்டால் பெற்றோர் என்ன செய்யணும்?



குழந்தை சொல்வதை நம்பணும். (பொதுவா குழந்தைகளுக்குப் பலவிதமான பயங்கள் இருக்கிறதால, பாலியல் கொடுமை பற்றி வெளியே சொல்றதில்லை)

அமைதியா, குழந்தைக்கு ஆதரவா இருங்க.

# பெற்றோருக்கு உதவி தேவைப்பட்டா என்ன செய்யலாம்?

உங்களுக்கு உதவி செய்யக்கூடிய நம்பிக்கையான நபர்களிடம் இது பற்றி பேசுங்கள். உதாரணமாக, உங்கள் பகுதியில் சமூக சேவை செய்பவர்கள், ஆசிரியர், மருத்துவர், காவல்துறையினர், தொலைபேசி எண் 1098-ல் குழந்தைகளுக்கான இலவச உதவி வழங்குபவர்கள் போன்றோர்.

துளிர்

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
57-A, L- ப்ளாக், 26வது தெரு, அண்ணா நகர்(கிழக்கு)
சென்னை- 600102, இந்தியா, தொலைபேசி: 044-26632026,
Email: tulircphcsa@yahoo.co.in, www.tulircphcsa.org